**I ADDL. DISTRICT MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**MCOP.NO.412/2017**

| | | |
|---|---|---|
| **NAME** | : | இலியாஸ் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 01.12.2022.**

குறுக்கு விசாரணை

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரி. மனுதாரர் அழைத்ததன்பேரில்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரி. அவர் எனக்கு நண்பர் அல்ல. விபத்தில் காயம்பட்ட நபரை நான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை. காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்கவில்லை. நான் காவல் துறையினருக்கு எந்த தகவலும் கொடுக்கவில்லை. நான் யாருக்கும் போன் செய்யவில்லை. அங்கிருந்தவர்கள் போன் செய்தார்கள். நான் அங்கு இல்லாத காரணத்தால் பார்க்காத விஷயத்தை பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்தார்கள். கோர்ட்டிற்கு போகவில்லை. இந்த வழக்கு பற்றி இப்போதுதான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்கிறேன். போலீசார் என்னை விசாரித்ததாக சொல்வது பொய் என்றாலும், விபத்தை நேரில் பார்க்காத காரணத்தால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.